1999 மே 18]

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நீங்கள் ஒட்டுமொத்தமாக கொடுத்த statement-ஐச் சொல்லுகிறீர்கள். நான்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 55-statements எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது. இனிமேல் நான் அனுமதிக்க முடியாது.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: ஏராளமான ஆலைகள் மூடப்பட்டு இருப்பதால் தொழிலாளர்கள் எல்லாம் இன்று பெரிய போராட்டங்கள் நடத்தி, இரயில் மறியல் செய்கின்ற அளவுக்கு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்குத்தான் நான் சொன்னேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லாவற்றையும் சொல்லிவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. அப்பாவு, நீங்கள் என்ன சொல்ல வேண்டும்? (குறுக்கீடு) திரு. பி.ஆர் சுந்தரத்திற்கு அனுமதி கிடையாது. திரு. அப்பாவு, நீங்கள் சொல்லுங்கள்.

(ஈ) கொடுமுடியாறு திட்டம் நிறைவேற்றுதல்

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் கிடப்பிலே கிடந்த அணைக்கட்டுகளை எல்லாம், இந்த அரசு பொறுப்பேற்றதும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்ன சொல்ல வருகிறீர்கள்?

திரு. மு. அப்பாவு: இது தென் மாவட்டத்தைச் சேர்ந்த விஷயம். நான் பேசியதும், அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள் என்று கருதுகிறேன். தென் மாவட்டத்தில் கிடப்பிலே கிடந்த நம்பியாறு திட்டம், ஆலந்துரை ஆறு, பொய்கை ஆறு, பச்சை ஆறு திட்டங்களுக்கெல்லாம் புத்துயிர் கொடுத்து, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்று வருகின்றன. களக்காட்டிலே பேசும்போது இந்த மாவட்டத்தினுடைய பணிகளையெல்லாம் 3 மாதங்களுக்கு...

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் பேசி முடியுங்கள்.

திரு. மு. அப்பாவு: 3 மாதங்களுக்கு ஒருமுறை வந்து ஆய்வு செய்து இந்தப் பணிகளைச் சிறப்பாக முடித்துத் தருகிறேன் என்றார்கள். அந்த அடிப்படையில் பணிகளும் வேகமாக நடைபெற்றுக்

கொண்டிருக்கின்றன. ஆனால் கொடுமுடியாறு திட்டம்தான் மிக மோசமான நிலையில் இருக்கிறது. 1-7-1976-ல் கொடுமுடியாறு திட்டத்திற்கு 166 இலட்ச ரூபாயில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 40 இலட்ச ரூபாய் செலவில் அலுவலகம், குடியிருப்புகள் எல்லாம் கட்டப்பட்டு, பின்னர் இந்த அணைக்கட்டுத் திட்டம் கிடப்பிலே போடப்பட்டது. 1986 ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். அவர்கள் வந்து அந்தப் பணிகளை மீண்டும் ஆரம்பித்தார்கள். 1987-ல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இந்த வரலாற்றை எல்லாம் பேசுவதற்கு அனுமதி கொடுக்க முடியாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்கிறீர்களா? (குறுக்கீடு) நீங்கள் சொல்லி முடித்தாகிவிட்டது. நான் இதற்கு மேல் அனுமதி கொடுக்க முடியாது. நீங்கள் சொல்ல வேண்டிய கருத்திற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் என்று சொன்னால், நீங்கள் உட்கார வேண்டும். உங்கள் கருத்துக்கு அவர் பதில் சொல்வார். (குறுக்கீடு) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாக இருக்கின்ற கொடுமுடியாறு திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் இப்போது செய்யப்பட்டிருக்கிறது. நில ஆர்ஜிதம் செய்வதை பொதுப்பணித் துறையிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். இதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. இம்மாத இறுதிக்குள் ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும். ஜூன் மாத இறுதியில் வேலை தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. அறிக்கைகள் அளித்தல்

(அ) அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி, அவை உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமைக் குழுவின் சார்பில் உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்மீது